# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே

யாவரும் கேளிர்


பதிப்பாசிரியர்கள்

**சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**ப. பத்மநாப பிள்ளை**

**வ. இராசரத்தினம்**



வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2015**

ISBN NO : 978-81-920884-4-0

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு (கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி.மைக்கேல் சரோஜினி பாய்<br>ப.பத்மநாப பிள்ளை<br>வ.இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2015 |
| தாள் | : | 18.6 மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | அனுகம்பர் 12 புள்ளி |
| பக்கம் | : | XII + 460 |
| விலை | : | ரூபாய்.400/- |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி. |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001.<br>தமிழ்நாடு.<br>தொ.பே. 0451 - 2427458 |

62. பி. ரெஜினா
சங்க இலக்கியத்தில் மனித மாண்புகள் 292
63. க. ரேவதி
அறிவோம் ஞானியை 297
64. மர்.லட்சுமிபிரியா
சங்க அகப் பாடல்களில் சைவக் கோட்பாடுகள் 302
65. செ. லதா ஈஸ்வரி
'தோல்' நாவலில் மொழியியல் பயன்பாடு 307
66. ப. லிங்கம்
சிலப்பதிகாரம் காட்டும் இல்லற மகளிர் கடமைகள் 312
67. சு. வசந்தி
செவிலித் தாயின் தாய்மைப் பண்புகள் 317
68. அ. வளர்மதி
பாரதியின் 'சத்ரபதி சிவாஜி' – ஓர் ஆய்வு 322
69. சை.வஹிதா கௌசியா
சீறாப்புராணத்தில் காப்பிய நலன்கள் 327
70. வாசுகி ஜெயரத்னம்
சங்க இலக்கியத்தில் நற்றாய் 332
71. ஆ.விக்டோரியா
'ஔவைக் குறள்' கூறும் உடற்கூறு 337
72. த.வித்யா
காரைக்கால் அம்மையாரின் பக்தி நெறி 342
73. ரெ. விமலாதேவி
நவீன வாழ்வியலும் குழந்தைகளும்
– சு.வே. புனைவுகள் வழி 347
74. விஜயராஜேஸ்வரி
மலையாள மொழி 352
75. ரா.விஜயலட்சுமி
குறுந்தொகையில் தோழியின் நிலை 357
76. பொ.வெங்கடேஸ்வரி
நான்மணிக்கடிகையில் கல்வி 362

# அறிவோம் ஞானியை

**முன்னுரை**

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்கத் தோன்றியவர்கள் பலர். எளிமையான வாழ்க்கை, அறிவாற்றல், கடின உழைப்பு இவற்றால் உயர்ந்தவர்களுள் ஒருவரே ஞானி. ஞானி தன் வாழ்க்கை அனுபவங்களை, வரலாற்றை "நானும் என் தமிழும்" என எழுதியுள்ளார். அப்பனுவலின் பகிர்வினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்வியல் விவரங்கள்**

கோவை மாவட்டம் பல்லடம் வட்டத்தில் சோமனூரில் பிறந்தவர். தந்தையார் கிருஷ்ணசுவாமி; தாயார் சுப்பம்மாள். உடன் பிறந்தவர்கள் எண்மர்; மனைவி இந்திராணி; மக்கள் இருவர் பாரி, மாதவன். பட்ட வகுப்பினை முடித்தவர்; தமிழாசிரியராகப் பணியாற்றி விருப்ப ஓய்வினைப் பெற்றவர். ஆங்கில இலக்கியம், தத்துவம், வரலாறு, அறிவியல், மார்க்சியம், பொதுவுடைமை, திறனாய்வு எனப் பல துறைகளில் ஈடுபாடுடையவர்.

**இளமையும் வறுமையும்**

பள்ளிக் கல்வியைக் கோவையில் முடித்த பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்ட வகுப்பினை முடித்தார். மேற்படிப்பினைக் குடும்பத்தின் பொருளாதார நிலை காரணமாகத் தொடரவில்லை என அவரே குறித்துள்ளார். மேலும் "நான் கல்வி கற்பதற்காகத் தம் கல்வியை இழந்தனர் என் உடன் பிறந்தவர்கள்" (பக். 45) என்கிறார்.

தான் வாழ்ந்த சோமனூர் வட்டாரத்தில் தலைமையைக் கைப்பற்ற நடந்த போட்டியில் தன் குடும்பமும் பாதிக்கப்பட்டது என்கிறார். கிராமத்து இயற்கையோடும் மக்களோடும், குறிப்பாக நெசவாளர்களோடும் அவரது இளமைக்கால வாழ்க்கை அமைந்தது.

**தனித்துவம்**

தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை எனப் பல இடங்களில்

---

பேரா. க. ரேவதி,
பாத்திமா கல்லூரி, மதுரை.